## பூக்கும் தாவரங்களின் புற அமைப்பியல் 1

1. கால்சிகத்திலிருந்து கிடைக்கப்பெறும் நிறமி
   a) கால்சிசின் b) அலோயின் c) ஹிமாட்டோசைலின் d) ஈயோசின்
2. சுவரச்சூல் ஒட்டுமுறை எவ்வகைச் சூற்பையில் காணப்படுகிறது?
   a) ஒருசூலிலை, ஒருசூலறைச் சூலகம் b) பலசூலிலை, ஒருசூலறைச் சூலகம்
   c) பலசூலிலை, பலசூலறைச் சூலகம் d) ஒருசூலிலை, பலசூலறைச் சூலகம்
3. தலைமஞ்சரியின் அடிப்பகுதியில் காணப்படும் பல பூவடிச்செதில்களான வட்ட அடுக்கு
   a) இலையடிச்செதில் b) இன்வலூக்கர் c) குழல் சிறுமலர்கள்
   d) பூக்காம்புச் செதில்
4. மாற்றுரு இலைக்காம்பு ஒளிச்சேர்க்கை செய்யும்போது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   a) இலைத்தொழில் தண்டு b) குமிழ்தண்டு c) மட்ட நிலத்தண்டு
   d) இலைத்தொழில் இலைக்காம்பு
5. அச்சு சூல் ஒட்டுமுறையில் சூலகம்
   a) ஓரறைஉடையது b) மூன்று அறை உடையது
   c) நான்கு அறை உடையது d) பல அறைகள் உடையது
6. கணுக்களும் கணுவிடைத் பகுதிகளும் மொட்டுகளும் காணப்படாது
   a) தண்டுகளில் b) ரைசோம்களில் c) கிழங்குகளில் d) வேர்களில்
7. ஒழுங்கற்ற இருசமபக்க மலருக்கு எடுத்துக்காட்டு
   a) கல்வாழை b) குரோட்டலேரியா c) கோவை d) ஹைபிஸ்கஸ்
8. கீழ்கண்ட தாவரங்களில் எது அதனுடைய மூன்று பண்புகளோடு இணைக்கப்பட்டுள்ளன
   a) பட்டாணி:$C_3$ சுழற்சி, கருவூண் உடைய விதை வெக்ஸில்லரி இதழமைவு
   b) தக்காளி:திருகிய இதழமைவு அச்சு சூல் ஒட்டுமுறை, பெர்ரி
   c) வெங்காயம்:குமிழம், அடுக்கு இதழமைவு அச்சு சூல் ஒட்டுமுறை
   d) மக்காச்சோளம்: $C_3$ சுழற்சி, மூடிய வாஸ்குலார் கற்றைகள், ஸ்கூட்டெல்லம்
9. ரெஸீம் வகை மஞ்சரி, ஸைம் வகை மஞ்சரி ஆகியவற்றில் மலர்ச்சி முறைகள்
   a) முறையே மைய நோக்கிய முறையும் மைய விலகு முறையும்
   b) இரண்டும் மைய நோக்கிய முறைகள்
   c) முறையே மைய விலகு முறையும் மைய நோக்கிய முறையும்
   d) இரண்டும் மைய விலகு முறைகள்
10. பச்சையான தட்டையான உறுப்பாகத் தண்டு உருமாறி இலைகளின் பணியினைச் செய்வது இவ்வாறு அழைக்கப்படும்
    a) ஃபில்லோகிளேடுகள் b) செதில்கள் c) கிளாடோடுகள்
    d) ஃபில்லோடுகள்
11. தூண்வேர்கள் காணப்படுவது
    a) ஆலமரம் b) காரட் c) டர்னிப் d) சர்க்கரைவள்ளி கிழங்கு
12. ஆரச்சமச்சீருடன் காணப்படும் மலர்கள்
    a) பிராசிகா b) டிரைபோலியம் c) பைசம் d) கேசியா
13. தேங்காயில் உண்ணும் பகுதி
    a) எபிகார்ப் b) கருவூண் c) மீசோகார்ப் d) எண்டோகார்ப்
14. மஞ்சரியில் காணப்படும் மலர்கள் ஒவ்வொன்றும் எதன் மூலமாக மஞ்சரித் தண்டுடன் இணைந்துள்ளன?
    a) பீடியோஸ் b) மலர்காம்பு c) மஞ்சரிக்காம்பு d) பூவடிச்செதில்
15. பின்வருவனவற்றுள் எது/எவை தவறு?
    i. பூஞ்சைகள், பிரையோஃபட்டுகள், ஆல்காக்கள் ஆகியவை சில கிரிப்டோகேம் தாவரங்கள்
    ii. கனித்தோலினால் மூடப்பட்ட விதையுள்ள தாவரங்கள் ஜிம்னோஸ்பெர்ம்கள்
    iii. இருவித்திலைத் தாவரங்கள் ஆஞ்சியோஸ்பெர்ம்கள்
    iv. ஒருவித்திலைத் தாவரங்கள் ஆணிவேர்த் தொகுப்புக் கொண்டவை.
    a) iii, iv மட்டும் b) i, ii மட்டும் c) ii, iv மட்டும் d) iii மட்டும்
16. பலகற்றை நிலை (பாலி அடல்பஸ்) என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது

a) சூலகவட்டம்  b) மகரந்ததாள் வட்டம்  c) அல்லி வட்டம்  d) புல்லி வட்டம்

17. ஒரு கணுவில் இரு இலைகள் ஒன்றுக்கொன்று எதிராகக் காணப்படுவது
a) எதிர் இலை அமைவு  b) மாற்று இலை அமைவு  c) வட்ட இலை அமைவு
d) மூவிலை அமைவு

18. இலைப்பரப்பில் நரம்புகளும் சிறிய நரம்புகளும் அமைந்திருக்கும் விதம்
a) இலையமைவு  b) நரம்பமைவு  c) பில்லோஃளேடு  d) முட்கள்

19. வேர்த்தொகுதி தொடர்பான கீழ்கண்ட கூற்றுக்களை கவனி
I.ஒரு வித்திலைத் தாவரங்களில் சல்லிவேர்த் தொகுதி தண்டின் அடிப்பகுதியிலிருந்து தோன்றுகிறது.
II.செல்நீட்சிப் பகுதி,வேர்த்தூவிப் பகுதி என அழைக்கப்படுகிறது.
III.சர்க்கரை வள்ளிக்கிழங்கில் வேற்றிட வேர்கள் பருத்து உணவைச் சேமித்து வைக்கிறது.
IV. மக்காச்சோளம் மற்றும் கரும்பின் தாங்கும் வேர்கள் தூண்வேர்கள் என அழைக்கப்படுகின்றன.இவற்றுள்
a) I மற்றும் II சரியானவை,அனால் III மற்றும் IV தவறானவை
b) II மற்றும் III சரியானவை,அனால் I மற்றும் IV தவறானவை
c) II மற்றும் IV சரியானவை,அனால் I மற்றும் III தவறானவை
d) I மற்றும் III சரியானவை,அனால் II மற்றும் IV தவறானவை

20. ஹெட்டிரோகேமஸ் தலைமஞ்சரி காணப்படும் தாவரம்
a) சூரியகாந்தி  b) வெர்னோனியா  c) லானியா  d) குரோட்டலேரியா

21. பைசம் சட்டைவத்தின் கனி வகை
a) காப்சூல்  b) லெகூம்  c) பெர்ரி  d) சைஷாகார்ப்

22. இருபால் மலரில் காணப்படும் அடுக்குகளின் எண்ணிக்கை
a) நான்கு  b) மூன்று  c) ஐந்து  d) இரண்டு

23. ஆராச்சமச்சீருடைய மலரை பூச்சூத்திரத்தில் குறிப்பிடும் முறை
a) A  b) %  c) ⨁  d) ⚥

24. ஈரில்லாத தாவரம்
a) முந்திரி  b) பனை  c) மக்காச்சோளம்  d) மேற்கண்ட எதுவுமில்லை

25. தேங்காய் எக்கனி வகையைச் சார்ந்தது?
a) ட்ரூப்  b) சைகோனஸ்  c) பக்டேட்  d) திரள் கனி

26. மலர்கள் ஒரு அச்சில் அமைந்திருக்கும் முறை அழைக்கப்படுவது
a) இலையமைவு  b) நரம்பமைவு  c) ஃபில்லோடு  d) மஞ்சரி

27. கீழ்கண்ட கூற்றுகளில் சரியானது எது?
a) புற்களின் விதைகள் என்டோஸ்பெர்ம் இல்லாதவை
b) மாங்கனி பார்த்தியோகார்பிக் கனியாகும்
c)
மக்காச்சோள தானியத்தில் புரதத்தாலான அலூரான் அடுக்கு காணப்படுகிறது
d) வளமற்ற சூலிலை ஸ்டாமினோடு என அழைக்கப்படுகிறது

28. மூவங்க மலர்கள் இதில் காணப்படுகிறது?
a) இருவித்திலை  b) வறள் நிலத்தாவரங்கள்  c) ஒருவித்திலை
d) மேற்கண்ட ஏதுவுமில்லை

29. கீழ்க்கண்டவற்றுள் எண்டோஸ்பெர்ம் உடைய விதை எது?
a) பீன்ஸ்  b) கடலை  c) பட்டாணி  d) ஆமணுக்கு

30. டார்ஸ்பீனியா இதற்கு எடுத்துக்காட்டாகும்
a) சீனான்தியம்  b) பானிக்கிள்  c) ஸ்பேடிக்ஸ்  d) மேற்கண்ட எதுவுமில்லை

31. பழங்களையும் அதைப் பயிரிடுவதையும் பற்றி விவரிக்கும் தோட்டக் கலைப் பிரிவு
a) சைட்டாலஜி  b) ஹார்ட்டிகல்ச்சர்  c) போமாலஜி
d) மேற்கண்ட எதுவுமில்லை

32. தனி இலைகளிலிருந்து சிற்றிலைகள் வேறுபடுவது
a)
ஒளிச்சேர்க்கை சிற்றிலைகளில் மட்டும் நடைபெறுகிறது; தனி இலைகளில் இல்லை
b)
ஒளிச்சேர்க்கை தனி இலைகளில் மட்டும் நடைபெறுகிறது; சிற்றிலைகளில் இல்லை.

c)
தனி இலைகளின் இலைக் கோணத்தில் கோணமொட்டு காணப்படுவதில்லை.
d)
சிற்றிலைகளின் இலைக் கோணத்தில் கோணமொட்டு காணப்படுவதில்லை

33. ஓரறையுடன் ஒரே ஒரு சூலுடன் காணப்படும் சூல்ஒட்டுமுறை
a) விளிம்பு சூல் ஒட்டுமுறை b) தளச்சூல் ஒட்டுமுறை c) ஃபிரி சென்ட்ரல்
d) அச்சு சூல் ஒட்டுமுறை

34. வெக்ஸில்லரி இதழமைவின் வேறுபெயர்
a) ஏறுதழுவு இதழமைவு b) தொடு இதழமைவு c) திருகு இதழமைவு
d) இறங்கு தழுவு இதழமைவு

35. இலைகள் முட்களாக உருமாறி காணப்படுவது
a) இலவு b) ஒப்பன்ஷியா c) பட்டாணி d) வெங்காயம்

36. 'ரெசிமோஸ்' மஞ்சரியைக் கொண்டது எது?
a) சோயாபீன்ஸ் b) கத்திரிக்காய் c) டுலிப் d) ஆலோ

37. இலை பற்றுக் கம்பியின் பயன்
a) பாதுகாப்பு b) பற்றி ஏறுதல் c) தற்காப்பு d) பிடித்தல்

38. தவறான கூற்றைக் கண்டுபிடி
a) மலர் என்பது மாறுபாடு அடைந்த தண்டுத் தொகுதி
b) சைமோஸ் மஞ்சரியில் அச்சு ஒரு மலரில் முடிவடையும்
c) மலர்கள் அடுத்தடுத்த கணுக்களில் தண்டுகளிலும் வேரிலும் காணப்படும்
d) தண்டின் நுணி ஒரு மலராக மாறுவது தனி மலராகும்

39. மாங்கனியின் மிசோகார்பின் தன்மை
a) கல்போன்று கடினமானது b) கடினமானது c) நார்கள் போன்றது
d) சதைப்பற்றுள்ளது

40. தண்டு அல்லது கிளைகளில் இலைகள் அமைந்து இருக்கும் விதம்
a) நரம்பமைவு b) மஞ்சரி c) இலையமைவு d) ஃபில்லோடு

41. பளிச்சென்ற வண்ணத்துடன் கூடிய அல்லி இதழ்கள் பூச்சிகளைக் கவர்ந்திழுப்பது
a) கருவுதலுக்காக b) மகரந்தச்சேர்க்கையாக c) பரவுலுக்காக
d) முளைத்துலுக்ககாக

42. ஆணிவேரின் சில மாற்றுருக்கள்
a) தொற்றுத்தாவர வேர்கள், கூம்பு வடிவ வேர்கள்
b) தூண் வேர்கள், கூம்பு வடிவ வேர்கள்
c) பம்பர வடிவ வேர்கள், தூண் வேர்கள்
d) கதிர் வடிவ, வேர்கள், பம்பர வடிவ வேர்கள்

43. கீழே கொடுக்கப்பட்டுள்ள பழங்களில் எது 'பார்த்தினோகார்ப்பிக்' (Parthenocorpic) வகையைச் சார்ந்தது?
a) ஆப்பிள் b) பலாப்பழம் c) வாழை d) கத்திரிக்காய்

44. நெட்டிலிங்கம் தாவரத்தில் எவ்வகை இலையமைவு காணப்படுகிறது
a) வட்ட இலையமைவு b) எதிர் இலையமைவு c) மாற்று இலையமைவு
d) மேற்கண்ட எதுவுமில்லை

45. பூச்சூத்திரத்தில் G குறியீடு
a) சூலக கீழ்மலர் b) மேல்மட்டச் சூற்பை c) கீழ்மட்டச் சூற்பை
d) மகரந்ததாள்

46. புல்லிவட்டம் என்பது
a) மலரின் உள்ளடுக்கு b) இரண்டாவது அடுக்கு c) மலரின் வெளியடுக்கு
d) நான்காவது அடுக்கு

47. சைனோ ரோஜா, கடுகு கத்திரிக்காய், உருளைக்கிழங்கு, கொய்யா, வெள்ளரி, வெங்காயம் மற்றும் டுலிப் ஆகியவற்றில் எத்தனை தாவரங்களில் மேல் அண்டகம் (சூற்பை) காணப்படுகிறது?
a) ஆறு b) மூன்று c) நான்கு d) ஐந்து

48. இலைத்தாளின் அனைத்து நரம்புகளும் ஒன்றுக்கொன்று இணையாகச் செல்லும் நரம்பமைவு அழைக்கப்படுவது.
a) வலை நரம்பமைவு b) இணை நரம்பமைவு
c) சிறகு வடிவ வலைப்பின்னல் d) அங்க வடிவ நரம்பமைவு

49. பலாக்கனியின் தடித்த வெளித்தோலில் காணப்படும் முட்கள் எவற்றை குறிக்கிறது?
a) சூலிலை b) சூல் முடி c) கனி உறை d) சூல் உறை

50. பின்வரும் கூற்றுகளில் எவை சரி?
I. புல்லிவட்டம், அல்லிவட்டம், மகரந்தத்தாள் வட்டம், சூலக வட்டம், ஆகியவை மலரின் அடுத்தடுத்து அமைந்துள்ள நான்கு பாகங்கள்
II. ஒழுங்கான மலர்கள் இருபக்கச் சமச்சீரினையும், ஒழுங்கற்ற மலர்கள் ஆரச்சமச்சீரினையும் கொண்டுள்ளன.
III. கீழ் மட்டச்சூற்பையுடைய மலர் சூலக மேல்மலர்; மேல்மட்டச் சூற்பையுடைய மலர் சூலகக் கீழ்மலர்
a) II, III மட்டும் b) I மட்டும் c) I, II மட்டும் d) III மட்டும்

51. பாப்பிலியோனேஷியஸ் அல்லிவட்டத்தில் கொடி அல்லி இவ்வாறும் அழைக்கப்படும்
a) வெக்சில்லம் b) கெரோனா c) கரீனா d) பாப்பஸ்

52. நிலத்துடன் தொடர்பின்றி பெரிய மரங்களின் கிளைகளில் வாழும் தாவரங்களில்
a) கூட்டுயிரிகள் b) சாறுண்ணிகள் c) தொற்று தாவரங்கள்
d) ஒட்டுண்ணிகள்

53. அதைப்பு இலையடி காணப்படும் தாவரக் குடும்பம்
a) ஃபேபேஸி b) ஆஸ்ட்டரேஸி c) யூஃபோர்பியேஸி d) மியூஸேஸி

54. விதைகள் எப்பாக்கத்தில் இருந்து உண்டாகிறது?
a) சூற்பை b) சூலிலைகள் c) சூல்கள் d) சூலுறை

55. சமச் சீரற்ற மலர்
a) பைசம் b) கல்வாழை c) சொலானம் d) மேற்கண்ட எதுவுமில்லை

56. கூல்ஒட்டுத் திசுவும் பெரிகார்ப்பும் உண்ணும் பகுதியாகக் காணப்படுவது
a) ஆப்பிள் b) வாழை c) தக்காளி d) உருளைக்கிழங்கு

57. இலை பையாக மாறுபாடு அடைந்துள்ள தாவரம்
a) நெப்பந்தஸ் b) யூட்ரிகுலேரியா c) அகேஷியா
d) மேற்கண்ட எதுவுமில்லை

58. வேரின் நுனியைப் பாதுகாக்கும் தொப்பி போன்ற அமைப்பு
a) வேர்த்தூவிகள் b) வேர்முடி c) வெலாமன் d) நிமட்டோபோர்கள்

59. இருவித்திலைத் தாவரங்களில் பொதுவாகக் காணப்படும் வேர்த் தொகுப்பு
a) சல்லி வேர்கள் b) தொற்று வேர்கள் c) ஆணி வேர் d) வேற்றிட வேர்கள்

60. இலையடிப்பகுதி பருத்துக் காணப்படும் இதழமைவு
a) உறைபோன்ற இலையடிகொண்ட இலை b) பல்வனேட் c) காம்பற்றது
d) இலையடிச்செதில் கொண்டது

61. கீழ்க்கண்டவற்றுள் இலையின் பாகம் அல்லாதது எது?
a) பூக்காம்பு b) இலையின் அடிப்பாகம் c) இலைக்காம்பு d) இலைத்தாள்

62. தண்டில் இலைகள் காணப்படும் பகுதி
a) கோணம் b) கணுவிடை c) செதில் d) கணு

63. சதைப்பற்றுள்ள ஒற்றை விதை கனியானது
a) கேரியாப்சிஸ் b) ட்ரூப் c) சோரோசிஸ் d) பெர்ரி

64. வேரின் வேர்த்தூவிகள் காணப்படும் பகுதி
a) நீட்சிப் பகுதி b) முதிர்ச்சிப்பகுதி c) ஆக்குத்திசு பகுதி d) வேர்முடி

65. தரைகீழ் தண்டிற்கு எடுத்துக்காட்டு
a) கருணை கிழங்கு b) பிஸ்டியா c) ஜக்கார்னியா d) ஓப்பன்ஷியா

66. மலர்ச்சூத்திரத்தில் % என்ற குறியீடுகள் முறையே எவற்றைக் குறிக்கின்றன?
a) இருசமபக்கச் சமச்சீர் மலர், ஆரச்சமச்சீர் மலர்
b) ஆரச்சமச்சீர் மலர், அல்லி ஒட்டிய மகரந்தத்தாள்
c) ஆரச்சமச்சீர் மலர், இருபக்கச் சமச்சீர்
d) இருபக்கச் சமச்சீர், பூவடிச் செதில் கொண்டவை

67. பலாவில் காணப்படும் கனி வகை
a) கூட்டுக்கனி b) சைகோனேஸ் c) சோரோசிஸ் d) திரள்கனி

68. சைனா ரோஜா, ஜசிமம் (இட்லிப்பூ) சூரிய காந்தி, கடுகு, அல்ஸ்டோனியா, கொய்யா, எருக்கு மற்றும் நீரியம் (ஒலியாண்டர்) ஆகிய தாவரங்களில் எத்தனை தாவரங்களில் எதிர் பூவடுக்கு (ஃபில்லோடாக்சி) காணப்படுகிறது?
a) இரண்டு b) மூன்று c) நான்கு d) ஐந்து

69. ஆஸ்ட்ரேஸி குடும்ப தாவரங்களில் மகரந்தத் தாளில் மகரந்தப்பை இணைந்தும், மகரந்தக் கம்பி தனித்தும் இருக்கும் நிலை
a) ஒரு கற்றை மகரந்தத்தாள் b) இரு கற்றை மகரந்தத்தாள்
c) சின் ஆன்ட்ரஸ் d) ஸிஞ்சினீஷியஸ்

70. ஹைபோகைனஸ் மலரில் சூலகம்
a) பாதிகீழ் மட்டம் b) கீழ் மட்டம் c) ஒழுங்கானது d) மேல்மட்டம்

71. பனை, மா ஆகியவற்றின் இலை நரம்பு அமைவுகள் முறையே
a)
அங்கைவடிவ இணை நரம்பமைவும் சிறகுவலை நரம்பமைவும் கொண்டவை
b)
சிறகு வலைநரம்பமைவும் அங்கைவடிவ இணை நரம்பு அமைவும் கொண்டவை
c)
அங்கை வடிவ வலை நரம்பமைவும், சிறகு இணை நரம்பமைவும் கொண்டவை
d)
சிறகு இணை நரம்பமைவும் அங்கை வடிவ வலை நரம்பமைவும் கொண்டவை

72. கருவுற்ற மலரில் கனியாக மாறுவது
a) சூற்பை b) புல்லி c) சூல்தண்டு d) மேற்கண்ட எதுவுமில்லை

73. ஒரு வேர் வளரும் போது வேரின் எப்பகுதி வளர்ச்சிக்குக் காரணமாகின்றது
a) வேர்முடி b) ஆக்குத் திசுப் பகுதி c) செல் நீட்சிப்பகுதி
d) செல் முதிர்ச்சிப்பகுதி

74. பூ சூத்திரத்தில் C A இந்த குறியீட்டுக்கு விளக்கம்
a) அல்லி ஒட்டிய மகரந்தம் b) சின்ஜினிஸியஸ் மகரந்தம்
c) கணக்கற்ற மகரந்தம் d) மலட்டு மகரந்தம்

75. மெல்லிய நீண்ட பற்றுக்கம்பிகளை தண்டிலிருந்து கொண்டுள்ள தாவரங்கள்
a) திராட்சைக்கொடி மற்றும் பூசணி
b) ஆஸ்திரேலிய அக்கேஷியா மற்றும் வாட்டர்மெலான்
c) பொகெய்ன்வில்லியா மற்றும் வெள்ளி
d) ஸ்ட்ராபெரி மற்றும் திராட்சைக் கொடி

76. எப்பொழுது அல்லி வட்டம் இணைந்த அல்லி வட்டம் என்றழைக்கப்படுகிறது?
a) அல்லி இதழ்கள் இணைந்திருந்தால் b) அல்லி இணையாதிருந்தால்
c) அல்லி இதழ்கள் ஒத்த அமைப்பில் இருந்தால்
d) அல்லி இதழ்கள் வேறுபட்ட அமைப்பிலிருந்தால்

77. பின்வருவனவற்றுள் வெலமன் திசு காணப்படும் தாவரம் எது?
a) ஆலமரம் b) மாமரம் c) வாண்டா d) பலா

78. தண்டின் இலைகளைத் தாங்கும் பகுதி
a) கணுவிடை b) கணு c) இலைமொட்டு d) ஆரத்தண்டு

79. அல்லி ஒட்டிய மகர்ந்தத்தாள்கள் காணப்படும் குடும்பம்
a) சொலானேசியீ b) ஃபேபேசியி c) லில்லியேசியீ d) யூபோர்பியேசியீ

80. ஹைபிஸ்கஸ்ஸின் அல்லிவட்டத்தின் இதழமைவு
a) தொடு இதழமைவு b) இறங்கு தழுவு அடுக்கு இதழமைவு
c) திருகு இதழமைவு d) மேற்கண்ட எதுவுமில்லை

81. முதன்மை வேரும் அதன் கிளைகளும் தோற்றுவிப்பது
a) ஆணி வேர்த்தொகுதி b) சல்லி வேர்த்தொகுதி
c) வேற்றிட வேர்த்தொகுதி d) ஹாஸ்டோரிய

82. ஒரு கணுவில் ஓர் இலை மட்டும் இருப்பது
a) ஒருபோக்கு இலையமைவில் b) குறுக்கு மறுக்கு இலையமைவில்
c) வட்ட இலையமைவில் d) மாற்றிலையமைவில்

83. ஒரு சூலிலையாலான ஓரறையுடைய சூலகம் காணப்படும் தாவரம்
a) பைசம் சட்டைவம் b) கால்சிகம் ஆட்டோம்னேல் c) சொலானம் நைக்ரம்
d) அல்லியம் சீபா

84. ஃபிரிசென்ட்ரல் சூல்ஒட்டுமுறை காணப்படுவது
a) டையாந்தஸ் b) ஆர்ஜிமோன் c) பிராசிகா d) சிட்ரஸ்

85. மூன்று சூலிலைகளையுடைய சூலகம் காணப்படுவது

a) வில்லியேசியீ b) ஃபேபேசியீ c) மால்வேசியீ d) சொலானேசியீ

86. தண்டுத் தொகுதியை தோற்றுவிப்பது
a) முளை வேர் b) முளை கருத்து c) விதையிலைகள்
d) ஹைபோகாட்டில்

87. மகரந்தத்தாள் வட்டம் மற்றும் சூலக வட்டத்துடன் காணப்படும் மலர்கள்
a) இருபால் மலர்கள் b) ஓரில்லமுடையவை c) ஈரில்லமுடையவை
d) ஒருபால் மலர்கள்

88. ஒளிச்சேர்க்கையை மேற்கொள்ளும் பசுமையான இலை
a) அதைப்பு b) இலையடிச் செதில் உள்ளவை
c) இலையடிச் செதில் அற்றவை d) தழை இலைகள்

89. ஆப்பிள் பழத்தில் உண்ணக்கூடிய பகுதி
a) பூக்காம்பு b) பூத்தளம் c) எபிகார்ப் d) மேற்கண்ட எதுவுமில்லை

90. குடுவைத் தாவரத்தில் குடுவை ஒரு மாறுபாடடைந்த
a) தண்டு b) வேர் c) மொட்டு d) இலை

91. அங்கை வடிவத் கூட்டிலை காணப்படும் தாவரம்
a) வேம்பு b) வாழை c) இலவு d) புளி

92. தாவரத்தில் ஒளிச்சேர்க்கை புரியம் முக்கிய உறுப்பு
a) தண்டு b) வேர் c) மொட்டு d) இலை

93. பேறிகைனஸ் மலர்கள் காணப்படுவது
a) ரோஜா b) கொய்யா c) வெள்ளரி d) செம்பருத்தி

94. முண்டுவேர்கள் காணப்படும் தாவரம்
a) மக்காச்சோளம் b) ரைசோபோரா c) மான்ஸ்டீரா d) வாண்டா

95. இஞ்சிஒரு தரைகீழ் தண்டாகும்.இதை வேரிலிருந்து வேறுபடுத்தும் பண்பு
a) இதில் பச்சையம் இல்லை b) இது உணவைச் சேமிக்கின்றது
c) இதில் கணுக்களும் கணுவிடைகளும் காணபடுகின்றன
d) இதில் சைலமும் சைலக்குழாய்களும் காணப்படுகின்றன

96. ஹைப்பிஸ்கஸில் புறப்புல்லிவட்டத்தை உருவாக்குபவை
a) புல்லி இதழ்கள் b) அல்லி இதழ்கள் c) பூவடிச்செதில்கள்
d) பூக்காம்புச் செதில்கள்

97. ஆலமரத்தைத் தாங்கும் அமைப்பு
a) தூண்டுவேர்கள் b) முண்டுவேர்கள் c) நிமட்டோஃபோர்கள்
d) வேர்த்தூவி

98. ஆர்ப்போக்கில் இரு சமபாகங்களாகப் பிரிக்கப்படும் மலர்
a) இருபக்கச் சமச்சீர் b) சமச்சிரற்ற மலர் c) ஆரச்சமச்சீர்
d) பைலேட்டிரல்

99. கீழ்க்கண்டவற்றுள் எந்த வறள் நிலத்தாவரத்தில் தண்டு தட்டையாக மாறுபாடு அடைந்து பச்சையத்துடன் ஒளிசேர்க்கையில் ஈடுபடுகின் றது?
a) கொலக்கேஷியா b) கிரிசாந்திமம் c) ஓப்பன்ஷியா d) வெள்ளரி

100. ஸ்பைக் என்பது ஒரு வகையான
a) சைமோஸ் மஞ்சரி b) கலப்பு வகை மஞ்சரி c) ரெஸிமோஸ் மஞ்சரி
d) மேற்கண்ட எதுவுமில்லை